**செ.வெ.எண்: 07** **நாள் : 02.11.2017**

# <u>பத்திரிகை வெளியீடு</u>

**கரூர் மாவட்டத்தில் தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) விதிகள் 2017, தொடர்பாக ஒரு கட்டிடத்தையோ அல்லது மனைபிரிவையோ பதிவு செய்தல் தொடர்பாக கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. கு. கோவிந்தராஜ், இ.ஆ.ப., அவர்கள் பின்வருமாறு தெரிவிக்கிறார்.**

1. கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) சட்டம் 2016, என்ற ஒரு சட்டத்தை மைய அரசு அறிவித்துள்ளது. இச்சட்டத்தை அமல்படுத்த தமிழ்நாடு கட்டட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) விதிகள் 2017ஐ தமிழக அரசு, அரசாணை (நிலை) எண். 112, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள். 22.06.2017 ன் மூலம் வெளியிடப்பட்டுள்ளது.

2. இச்சட்டத்தின்படி எந்த ஒரு கட்டிட உரிமையாளரும் எந்த ஒரு கட்டிடத்தையோ அல்லது மனை பிரிவையோ (500 சதுர மீட்டர் நிலப்பரப்பளவுக்கு மேல் அல்லது 8 குடியிருப்புகளுக்கு மேல்), தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை ஒழுங்குமுறை குழுமத்தில் பதிவு செய்யாமல், எந்த விளம்பரத்தையும் கொடுப்பதோ, சந்தை படுத்துவதோ, வீட்டை பதிவு செய்வதோ, விற்கவோ (அ) விற்க முயற்சி செய்வதோ (அ) எந்த முறையிலும் வீட்டையோ அல்லது மனையையோ முழுவதுமாகவோ (அ) பகுதியாகவோ வாங்குமாறு அறிவுறுத்துவதோ கூடாது. மேலும் கட்டிட உரிமையாளர்/மேம்பாட்டாளர் எவ்வொரு விளம்பரம் கொடுப்பதாக இருந்தாலும், தமிழ்நாடு கட்டிட, மனை விற்பனை (முறைப்படுத்தலும் மற்றும் மேம்படுத்தலும்) விதிகளின்படி பெற்றுள்ள பதிவு எண்ணை கண்டிப்பாக குறிப்பிட வேண்டும். இவ்விதிகள் நடைமுறைக்கு வந்த 22.06.2017–க்கு முன் முடிவடைந்த திட்டங்களுக்கு பணி நிறைவுச்சான்று விபரம் அல்லது பதிவுச்சான்று பெறுவதிலிருந்து விலக்களிக்க கோரி உரிய திட்ட அலுவலகத்தில் விண்ணப்பித்த விவரங்களை குறிப்பிட வேண்டும். இக்குறிப்புகளை வீடு / மனை கடன் வழங்கும் நிதி நிறுவனங்களும் கவனத்தில் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

3. இடைத்தரகராக செயல்படும் ரியல் எஸ்டேட் முகவர்களும் இக்குழுமத்தில் பதிவு செய்ய வேண்டும்.

4, பதிவு செய்ய தவறினால் சம்பந்தப்பட்ட கட்டிட உரிமையாளர் மற்றும் ரியல் எஸ்டேட் முகவர்கள் மீது இச்சட்டத்தின்படி சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர், கரூர் அவர்களால் அறிவுறுத்தப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**